1987 நவம்பர் 11]

நலத் துறை மூலமாக ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா? அப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் அதனுடைய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

தலைஞாயிறில் ஆதி திராவிட மாணவர் விடுதி.

59—(*வினா எண் 11910) **திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறில் ஆதி திராவிட மாணவர் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பயிற்சி நிலையம்.

60—(*வினா எண் 13892) **திரு. செ. இரத்தினவேலு மற்றும் திரு. சா. ஞானசுந்தரம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நலத்துறை மூலம் நடத்தப்படுகின்ற ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவ—மாணவியர்களில் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக யாரும் தேர்ச்சி பெறவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பெற்ற நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

திரு. செ. இரத்தினவேலு: மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக கடந்த 2 ஆண்டுகளாக ஒருவர்கூட தேர்ச்சி பெறவில்லையென்று சொன்னார்கள். அப்படியென்றால், அந்தத் துறையின் மூலமாக தேர்வு பெறுவதற்கு என்னென்ன வகையிலே அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். அந்தப் பயிற்சியின் மூலமாக தேர்ச்சி பெறுவதற்கு, பயிற்சியினுடைய தரத்தை உயர்த்துகின்ற வகையில், எம்.பி.எ. பட்டம் பெற்றவர்களை பணியில் அமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சியில் சேருவதற்கு, பெற்றோர்களின் ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாயாக குறிக்கப்பட்டு இருந்தது. அதிலே சேருகின்றவர்களுக்கு, பெரும்பாலும் கிராமத்திலேயிருந்து வருகின்றவர்களுக்கு நாம் பயிற்சி அளிக்கிறோம். பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தை 35,000 ஆக உயர்த்த வேண்டுமென்று, தற்போது மத்திய சமூக நல அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இப்போது அந்தப் பயிற்சியில் 52 மாணவர்கள் படிக்கிறார்கள். அதிலே ஒட்டுமொத்தமாக 10 பேரை தனியாகப் பிரித்து அவர்களுக்கு ஒரு பேராசிரியர் பயிற்சி அளிக்க வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறோம். அதைப்போல பேராசிரியர்கள், பகுதிநேர பேராசிரியர்கள், கௌரவர்களையும், சொற்பொழிவாளர்களையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. அதற்காக வழங்கப்பட்ட ரூ. 30-ஐ மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ரூ. 50 ஆக உயர்த்திக் கொடுக்க ஆணையிட்டு இருக்கிறார்கள். இப்படி நாம் படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். மேலும் நூலகத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள நூல்களை எடுத்து படிப்பதற்கு அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-20)

திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டாலும், ஐ.எ.எஸ்., ஐ.பி.எஸ் வகுப்புகளில் மாணவர்கள் தேறாத நிலை இருப்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு எந்தெந்த இடங்களில்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1987 நவம்பர் 11]

பயிற்சி அளிக்கப்படுகிறது? அவர்களின் நிலைமையை உயர்த்த தகுதிமிக்கப் பேராசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புவதோடு, அவர்களுக்குத் தரப்படும் உதவித் தொகையும் அதிகப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழி ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாம் சென்னையில் பயிற்சி அளிக்கிறோம். அதையும்கூட மதுரை மற்றும் திருச்சி மாவட்டங்களில் அளிப்பதற்கும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதைப் போலவே, பயிற்சி அளிக்கிற நேரத்தில் அவர்களுக்கு உதவித் தொகையை உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20—2—1987 முதல் ரூ. 150-லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இந்த ஆண்டு—1987-88-க்கு ரூ. 8.81,000 ஒதுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அவர்களுடைய நலனில் அக்கறை கொண்டு இந்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு, பேராசிரியர்களையும் நியமித்து இருக்கிறது. எனவே வருகிற ஆண்டுகளில் நல்ல ரிசல்ட் எதிர்பார்க்கிற அளவில் பயிற்சி அளிக்கப்படும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் நடத்தப்படுகிற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் போன்ற பயிற்சி வகுப்புகளில் கடந்த 2 வருஷங்களாக யாரும் தேரவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் கல்வியின் தரம் குறைந்திருக்கிறதா அல்லது அரசின் மொழிக் கொள்கையில் சிக்கல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். பொருளாதார அடிப்படையில் நாம் ரூ. 12,000 இன்கம் லிமிட் என்று வைத்திருக்கிறோம், அதையும் ரூ. 35,000 ஆக அதிகப்படுத்த வேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம். அது ஒரு வகை. பிறகு நாம் மாணவர்களைப் பயிற்சிக்கு அனுப்புகிறபோது பாதியிலேயேகூட போய் விடுகிற நிலை இருக்கிறது. 52 மாணவர்களைச் சேர்த்தோம். அதில் பாதி பேர் வேலைக்குப் போய் விடுகிறார்கள். வேலை கிடைக்கிறபோது பாதியிலேயே போய் விடுகிறார்கள். ஆகவே இதை

பார்த்துத்தான், இதற்கு ஒரு முன் உரிமை கொடுக்கிற வகையில் அவர்களையெல்லாம் பத்து பத்து பேராகப் பிரித்து, ஒவ்வொரு பத்து பேருக்கும் ஒரு பேராசிரியரைப் போட்டு அவர்களுக்கும் பயிற்சி அளிக்க இருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்னும் அதிகமாக வருகிற ஆண்டில் ரிசல்ட் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியை எடுத்துக் கொண்டால் "ராவ்'ஸ் இன்ஸ்டிடியூட்" இருக்கிறது. சென்னையில் பல இன்ஸ்டிடியூட்டுகள் இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மாணவர்கள் டெல்லி அல்லது! சென்னை அல்லது மற்ற இடங்களில் உள்ள இன்ஸ்டிடியூட்களுக்குச் சென்று படிக்க, அரசாங்கம் ஸ்காலர்ஷிப் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984, 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டு வரை நாம் "ராவ்ஸ் பயிற்சி மையத்திற்கு" 6 பேரை அனுப்பியிருக்கிறோம். அந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் பயில அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றிய முழு விவரத்தை அறிய தனியாகக் கேள்வி கேட்டால் விளக்கமாக பதில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

கொல்லிமலைப் பகுதியில் பால்வினை நோயைத் தடுக்க சிறப்புத் திட்டம்.

1—(*வினா எண் 226) திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொல்லிமலைப் பகுதியில் பால்வினை நோய் அதிகமாக உள்ளதால் சிறப்பு கவனிப்பு மருத்துவமனை ஏற்படுத்தி பால்வினை நோயினைத் தடுக்க அரசு முயற்சி ஏதும் எடுத்துள்ளதா?